RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL

சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt2224s-222810

OPEN ACCESS

# வ.ரா-வின் இலக்கியப் பணிகள்

ஆ. செந்தாமரை [அ, *]

[அ] தமிழ்த்துறை, ஈரோடு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, ஈரோடு-638009 தமிழ்நாடு, இந்தியா.

# Literary works of Va. Ramasamy

A. Senthamarai [a, *]

[a] Department of Tamil, Erode Arts and Science College, Erode-638009, Tamil Nadu, India

* Corresponding Author: thamaraithiru@gmail.com

Received: 09-09-2022
Revised: 18-11-2022
Accepted: 24-11-2022
Published: 10-12-2022

Check for updates

**ABSTRACT**

Va. Ra is called V. Ramasamy Iyengar was born on 17/09/1889 in Tingalore near Thirupalanam in Thanjavur district as the first son of Varadaraja Iyengar and Ponnammal. He did his school at the age of eight in Bangalore He learned English along with Tamil. He did his post-graduation in Central High School, Tiruvaiyaru. He passed the matriculation examination in 1905. Joined St. Peter's College, Thanjavur and studied F.A. Then he failed in the FA exam. He was upset. He wanted to join Surendranath Banerjee's National College located in Calcutta. Went to Calcutta. Va. Ra returned home unable to join the college due to lack of proper recommendation. Va. Ra was involved in politics, freedom struggle, revival in politics, social reform and he was interested in literary works.

**Keywords:** Ramasamy Iyengar, V Ra, Freedom, Literary Works

## எழுத்துப்பணி

இளம் எழுத்தாளர்களை உற்சாகப்படுத்துவது இயற்கையான குணமாக இருந்தது புதுமைப்பித்தனிற்கு உற்சாகம் கொடுத்து மேலும் மேலும் உயர்ந்த நிலைக்கு கொண்டு சென்றவர் இவரிடம் ஒரு எழுத்தாளர் கூட்டமே இருந்து கொண்டிருக்கும் பல்வேறு இதழ்களில் ஆசிரியராகவும் உதவி ஆசிரியராகவும் பணியாற்றினார் (Venkataraman, 2020). ஞான பானு உள்ளிட்ட பல்வேறு இதழில் பணியாற்றியதோடு இலங்கையில் வீரகேசரி என்னும் பத்திரிகை நடத்தினார் பஞ்சாபி மொழிக்காரர் புவனேஸ்வரி அம்மையாரை திருமணம் செய்து கொண்டார் (Va. Ra, 2019).

## சமூகப்பணி

இளம் வயதில் சமூகத்தில் நடக்கக்கூடிய அநீதிகளை எதிர்த்துப் போராடினார். அவரின் சொந்த ஊரில் தாழ்த்தப்பட்டவரின் பிணத்தை எடுத்துச் செல்லக்கூடாது என்ற நிலை இருந்து வந்தது. அந்நிலையை எதிர்த்து போராடினார். அவர் அணிந்திருந்த பூணூலை நீக்கி தன்னுடைய வாழ்வில் சாதி மதம் இன வேறுபாடு இன்றி வாழ்ந்தவர். கலப்பு மணத்தை ஆதரித்தவர். இவருடைய மணிவிழாவின்போது தமிழ் மக்கள் அளித்த நன்கொடையில் ஒரு வீடு வாங்கினார் 29 08 1956ல் வ. ரா இயற்கை எய்தினார் (Venkataraman, 2020).

## அரசியல் பணி

வா ரா காங்கிரஸ் இயக்கத்தில் தீவிரமாக ஈடுபட்டிருந்தார் 1910 ஆம் ஆண்டு அலகாபாத் நகரில் நடந்த காங்கிரஸ் மாநாடு முதன் முதலாக கலந்து கொண்ட மாநாடு அன்று முதல் அனைத்து மாநாடுகள் கட்சி நடவடிக்கைகள் குறித்து தாம் பணிபுரிந்த பத்திரிக்கையில் எழுதினார்.

## பாரதியாருடன் இலக்கிய பணி

திருவரங்கத்தைச் சார்ந்த கொடியாலம்ரெ ங்கசாமி ஐயங்கார் அறிமுகம் கிடைத்தது புதுச்சேரியில் அரவிந்தர்க்குப் பொருள் உதவி செய்வதற்கு வ. ராமசாமியை அழைத்துச் சென்றார்.

அவர்கள் வழங்கிய பணியை வ. ரா முழு ஈடுபாட்டுடன் திறமையாக மேற்கொண்டார் புதுச்சேரி சென்று அரவிந்தருக்கு உதவி செய்ய வ ராமசாமிக்கு மனதளவில் மகிழ்ச்சி. ஏனெனில், அரவிந்தரோடு பாரதியார் இருப்பதை தெரிந்து கொண்டு அவரைப் பார்க்கும் பேறு கிடைக்கும் என்பதே காரணமாகும். பாரதியின் சுதேச கீதங்களை வ. ரா. முழுவதும் படித்து ஈடுபாடு உடையவராக இருந்ததால் பாரதியைக் காண ஆர்வம் கொண்டிருந்தார் வாய்ப்பு கிடைத்ததால் பயன்படுத்திக் கொண்டார். அன்று முதல் தாய்மொழியின் சிறப்பு, தேசபக்தி, சமூக விடுதலை, பெண் விடுதலை போன்றவற்றில் தீவிர ஈடுபாடு கொண்டு விளங்கினார் வ. ராவின் வாழ்க்கை நிலையை மாற்றி பாரதி பித்தராக ஆக்கியது 1911 இல் இருந்து 1914 ஆம் ஆண்டு வரை புதுச்சேரியில் தங்கி பாரதிக்கு சேவை செய்து அவருடன் தம்மை ஈடுபடுத்திக் கொண்டார்.

பாரதியாரின் இலக்கியப் பணி, வாழ்க்கை போன்றவற்றை வ.ரா நூல்கள் எழுத இத்த தொடர்பு உதவியது வ.ராவைப் பொறுத்தவரைப் பாரதியார் அவருக்கு மாதா, பிதா ,குரு, தெய்வம் என்றிருந்தார் (Venkataraman, 2020). விடுதலைப் போராட்ட பணி காங்கிரஸ் இயக்கத்தில் வாரா தீவிரமாக ஈடுபட்டார். 1910 ஆம் ஆண்டில் அலகாபாத் நகரில் காங்கிரஸ் மாநாடு நடைபெற்றது அவர் கலந்து கொண்ட முதல் மாநாடு காங்கிரஸ் மாநாடு 1930 இல் நடைபெற்ற உப்பு சத்தியாகிரக போராட்டத்தில் ராஜாஜியுடன் வேதாரண்யத்தில் கலந்து கொண்டு அலிப்பூர் சிறையில் ஆறு மாத தண்டனையை அனுபவித்தார் பிறகு மிதவாத காங்கிரஸில் இணைந்தார் சிறையில் "ஜெயில் டைரி" என்ற கட்டுரைத் தொகுப்பை எழுதி வைத்திருந்தார் (Venkataraman, 2020).

## வாராவின் படைப்புகள்

படைப்புகள் பொதுவாக சமூக சீர்திருத்தம் நாட்டு விடுதலை பெண் முன்னேற்றம் மொழி வளர்ச்சி என்ற அடிப்படையில் அமைந்திருந்தன இவருடைய எழுத்துப்பணி சுதந்திரன்' என்ற இதழிலிருந்து தொடங்குகிறது (Venkataraman, 2020).

- •புதினங்கள் சின்னச்சாம்பு 1942
- •கோதை தீவு 1943
- •சுந்தரி 1946 (இ.ப))
- •விஜயம் 1956 (இ ப)

## சிறுகதை தொகுப்பு

- •கற்றது குற்றமா 1944
- •வாழ்க்கை வரலாறு
- •மகாகவி பாரதியார்
- •நடைச்சித்திரம் வாழ்க்கை
- •வினோதங்கள் 1947
- •தமிழ்ப் பெரியார்கள் 1943

## கட்டுரை நூல்கள்

- மழையும் புயலும் 1943 புண்ணியமும் பலவீனமும் 1948
- கலையும் கலை வளர்ச்சியும் 1947
- வசந்த காலம் 1964
- சுவர்கத்தில் சம்பாசணை 1964
- வ. ரா வாசகம் 1968
- வ. ராமசாமி

## அரசியல்

காங்கிரஸ் ஆட்சி 1938 ஆண்டு நிறைவு 1938

## மொழிபெயர்ப்பு

- ஜோடி மோதிரம் (வங்காளம் )1938
- ஜவஹர்லால் சுயசரிதம் 1935 இரு தொகுதிகள்
- பர்டோலிக் கதை (மகாதேவ தேசாய்) 1935
- நமது இந்தியா (மினுமசானி )1943
- கொள்கை விளக்க நூல்
- ஜப்பான் வருவானா?
- மறுப்பு நூல்
- மாயாமேயோ அல்லது மேயோவுக்குச் சவுக்கடி 1928

## கட்டுரைகள் (இதழ்களில் வந்தவை)

- பாரதியும் இலக்கிய மதிப்புரையும் சுதேசமித்திரன் 15.12.1935
- வேதாந்தசிமிழிலே அடைக்க வேண்டாம் காந்தி 1934
- உலக மகாகவி பாரதியார் தினமணி 10.09 1940
- பாரதியார் ஊழியன் 31 08 1926
- ஔவை, ஆண்டாள் - ஊழியன் 26 10 1926
- 50 வருஷங்களுக்கு முன் ஆனந்த விகடன் 1943 பெண்கள் விடுதலை சபை தினமணி 01.10.1941
- உண்மையான பெரியோர்கள் திருமணி 25 04 1943
- What is poetry The Indian Review pp 37-44 August 1982,pp 33-47 September 1982

## சிறுகதைகள் (இதழ்களில் வந்தவை)

1. கோகிலத்தின் குதர்க்கம், 1984, இலக்கியச் சிந்தனை. 2. கோட்டை வீடு 1942 கதைக் கோவை, தொகுதி 11

3. கட்டை வண்டி அல்லது பரதர அரசர் 1933. மணிக்கொடி 4. விதவை யமுனா பாய், மணிக்கொடி, 1B.5.34.

5. காளிதாசன், ஊழியன், 29.6.1926, 6.7.1926, 20.7.1926, 23.11.1926

## முடிவுரை

ஜவஹர்லால் நேருவின் வாழ்க்கை வரலாற்றை மொழிபெயர்த்து தமிழ் உலகிற்கு வழங்கினார். தமிழர்களின் உள்ளத்தில் புதிய சிந்தனைகளை விதைத்தவர். நடைச்சித்திரம் என்ற பெயரில் புதிய இலக்கிய வகைகளை உருவாக்கியவர். சந்தித்த மனிதர்களைப் பற்றியும் அவர்களிடம் ஆற்றிய

உரையாடல்கள் குறித்தும் நடைச் சித்திரத்தில் எழுதினார். அரசியல், எழுத்து, சமூகம், விடுதலைப் போராட்டம் என பல தளங்களில் இலக்கியங்களைப் படைத்து இலக்கிய பணியில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டு இலக்கியச் செழுமையை உலகறிய பதிவு செய்தவர்.

## References

Va. Ra, (2019) Thamizh Periyargal, Parisal, Chennai, India

Venkataraman, S. (2020) Va. Ra. (Va. Ramasamy)- Makers of Indian Literature, Sahitya Akademi, Delhi, India

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License